Western India Mission

# வெஸ்டன் இந்தியா மிஷன்
# Western India Mission

செய்திமலர் பிப்ரவரி-2023

**கிறிஸ்தேசுவுக்குள் அன்பு சகோர சகோதரிகளுக்கு,**

ஆண்டவரும் இரட்கருமாகிய இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு எங்களது அன்பான வாழ்த்துதல்கள். கடந்த காலங்களில் நம்மை வழிநடத்தி வந்த தேவாதி தேவனுக்கு நமது நன்றிகளையும் ஸ்தோத்திரங்களையும் செலுத்துகிறோம்.

கடந்த காலங்களில் நமது ஜெபங்களில், சிலவற்றை தேவன் ஏற்றுக்கொண்டார். இன்னும் பல ஜெபங்கனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே நமக்கு தோன்றுகிறது. சரியான சமயத்தில் -- சற்று தாமதமாக கூட - தேவன் அதற்கான பதிலைக் கட்டாயம் தருவார். சிலவேளைகளில் நாம்ஜெபித்த ஜெபத்திற்கு சற்றுவித்தியாசமான பதிலை ஆண்டவர் அருளிச்செய்வார். அதனைக் கண்டுகொள்ளுகிற கண்களை தேவன் நமக்கு அருளும்படி வேண்டிக்கொள்ளுவோம். சிலவேளைகளில் நமது ஜெபத்திற்கு இல்லை என்கிற பதிலைக்கூட ஆண்டவர் கொடுக்கிறார். பதில் எதுவாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்வது தான் நமது கடமை. அதுவே நமது விசுவாசம்.

இந்த ஆண்டு 10, 11 மற்றும் 12ம் வகுப்புகளில் அரசுத்தேர்வு எழுதச்செல்லும் நமது நண்பர்களுக்காகவும் மற்றும் நமக்கு அறிமுகமானவர்களுக்காகவும் ஜெபிப்போம். இவர்கள் சரியான நேரத்தில் பள்ளிகளுக்குச் செல்லவேண்டும். ஆசிரிய, ஆசியைகளுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிய வேண்டும். ஞாயிறு ஆராதனையை ஊதாசினப்படுத்தி, அந்த வேளைகளில் நடக்கும் கோச்சிங் வகுப்புகளுக்குச் செல்லாமல் ஞாயிறு ஆராதனையை சரியானபடி அனுசரிக்க வேண்டும். நமது நண்பர்கள் இதனை மீறி செல்வார்கள் என்றால் இவர்களுக்காக ஜெபித்து, ஆண்டவர் நமக்கு தந்த ஞானத்தின் படி ஆலோசனை சொல்லலாம்.



காஞ்சர்வாவில் நடைபெற்ற கிறிஸ்மஸ் கூடுகை

எதிர்வரும் நாட்களில் பொருளாதாரமந்த நிலைமை ஏற்படும் என்கின்ற கணிப்பு பொருளாதர நிபுணர்களால் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே இலங்கை மற்றும் பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம். ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளுக்கு இடையே நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் விளைவாக, உலகளாவிய பொருளாதாரம் முடங்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர, யுத்தத்தினால் தங்கள் இன்னுயிரை இழக்கின்ற மக்களுக்காக, தங்கள் சரீர அவயங்களை இழக்கின்ற மக்களுக்காக, அவர்களை பராமரிக்கின்ற மக்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படவேண்டும். இந்தியாவில் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ ஏற்ற பொருளாதாரம் ஏற்படவேண்டும். அதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற வேண்டும்.

இந்த ஆண்டு 9 மாநிலத்தில் தேர்தல் நடைபெறப் போகின்றது. ஆண்டவருடைய நாமத்திற்கு ஏற்ற அரசுகள் இந்த மாநிலங்களில் ஆட்சி பொருப்பெடுக்க வேண்டும். தேவநாமத்துக்கு ஏற்ற அரசு அமைய நாம் ஜெபிப்போம். குறிப்பாக இந்த அரசை மாற்றும் என்றோ அல்லது நாம் விரும்புகின்ற அரசை ஏற்படுத்தும் என்றோ தேவனுக்கு கட்டளை கொடுக்காமல், ஆண்டவருடைய சித்தம் நிறைவேற ஜெபிப்போம்.

இந்தியாவில் உள்ள அனைத்து திருச்சபைகளுக்காக ஜெபியுங்கள். குறிப்பாக, உத்திரகாண்ட், மத்தியபிரதேசம், சத்தீஷ்கார், உத்திரபிரதேசம், ஜார்கண்ட் மாநிலங்களிலுள்ள கிறிஸ்தவர்கள் மற்றும் போதகர்கள் மீது, காவல்துறையால் போடப்படுகின்ற உண்மைக்கு மாறான வழக்குகள், மற்றும் ஆலயஆராதனைகளில் ஏற்பட்டுள்ள இடைஞ்சல்கள் மாற்றப்படவேண்டும். இந்தியாவிலுள்ள அனைத்து ஆராதனைகளிலும் தரமான போதனைகள் மக்களுக்கு கிடைக்க வேண்டும். கிறிஸ்தவத்தின் கொள்கைகளுக்கு மாறான உபதேசங்கள் எங்கும் பெருகிவருகிற இந்த வேளையில் நாம் இதற்காக அதிகமாக ஜெபிக்க கடமைபட்டுள்ளோம்.

இந்த மாதக்கடையிசில் லெந்துநாட்களுக்குள்ளாக பிரவேசிக்கிஇருக்கின்றோம். லெந்து நாட்களில் வேதத்தை தியானிப்பதிலும் ஜெபத்திலும் அதிகநேரம் கழிக்க ஆண்டவர் கிருபைசெய்வாராக. ஆண்டவருக்கு பிரீயமில்லாத காரியங்கள் நம்வாழ்வில் இருந்தால் விட்டுவிட தீர்மானிப்போம். இத்தீர்மானத்தை நிறைவேற்ற தேவபெலனை நாடுவோம். கூடுமானவரை நமது திருச்சபைகளில் நடக்கும் கூட்டங்களுக்கு செல்ல தீர்மானிப்போம். ஆண்டவருக்கென்று இதுவரை நாம் செய்யாத ஒரு நற்செயலை புதிதாகச் செய்ய தீர்மானியுங்கள்.



**கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி - டோக்கர்வா**

# எரேமியாவின் புலம்பல்

கிறிஸ்துவுக்கு முன்பாக 650 முதல் 570ம் வரை வாழ்ந்தவன் தான் எரேமியா தீர்க்கன். தாயின் வயிற்றில் உருவாக்கும்முன்னே ஆண்டவரால் அறியப்பட்டவன். தேவன் இவரை பரிசுத்தம் பண்ணி, ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக கட்டளைபெற்றவன் (ஏரேமியா 1: 5). யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா வரை ஆண்டவருடைய வார்த்தையை அறிவித்தவன். எரேமியாவுக்கு விரோதமாக யூதர்களும் இஸ்ரவேல் ராஜாக்களும் எழும்பும் பொழது அதிகமாக பயப்பட்டான். தேவன் எரேமியாவுக்கு தரிசனமாகி, “நான் சிறுபிள்ளை என்று நீ சொல்லாதே. நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்கு கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக. நீ அவர்களுக்கு பயப்படவேண்டாம்; உன்னைக்காக்கும்படிக்கு நான் உன்னுடன் இருக்கிறேன் என்று கர்த்தர் செல்லி, கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு இதோ என் வார்த்தையை உன்வாயிலே வைக்கிறேன். பார், பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்கவும், கட்டவும், நாட்டவும், நான் இன்றைய தினம் ஜாதிகளின்மேலும் ராஜ்யங்கின் மேலும் ஏற்படுத்தினேன்” (எரேமியா 1 : 7 - 10 ) என்று அவனுக்கு, அவனுடைய அழைப்பைக்குறித்து சாட்சிபகர்ந்தார். ஏரேமியா தீர்க்கத்தரிசனம் சொல்லி வருகையில், அவனுக்கு விரோதமாக இராஜாக்களும், ஆசாரியர்களும் மற்றும் இதர தீர்க்கதரிசிகளும் “இந்த மனுஷன் மரணஆக்கினைக்கு பாத்திரவான்” (எரேமியா 26:11) என்று கூக்குரல் இட்டார்கள். அந்த நிலையிலும் தேவன் அவனுக்கு துணையாய் இருந்து அவனைக் காக்கும்படி கட்டளையிட்டார். அவனுடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் கர்த்தர் இதனைக் குறித்து, “அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்” (எரேமியா 1 : 19) என்று கூறுகிறார். இவ்வித அழைப்பை பெற்ற எரேமியாவின் தீர்க்கதரிகனத்தை சற்று தியானிப்போம்.

எரேமியாவின் தீர்க்கதரிசனத்தை பொதுவாக, இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். எரேமியா 2ம் அதிகாரம் 13ம் வசனத்தில் வாசிக்கின்றபொழுது, என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள். ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள். தண்ணீர் நிற்காத வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்காக தெரிந்துகொண்டார்கள். எரேமியா, ஜனங்கள் எவ்விதமாக ஆண்டவரை வீட்டு விலகிப்போனார்கள் என்பதை பலதீர்க்கதரிசனத்தின் வாயிலாக சொல்லுகிறார்.

**பின்வரும் வாக்கியங்களை கவனத்துடன் படியுங்கள்.**

❋ வேதத்தை போதிக்கிறவர்கள் என்னை(கர்த்தரை) அறியாமலிருந்தார்கள் (எரேமியா 2:8)

❋ மந்தையை மேய்க்கின்ற மேயப்பர்கள் எனக்கு துரோகம்பண்ணினார்கள் ( எரேமியா 2:8)

❋ தங்கள் முகத்தை அல்ல தங்கள் முதுகை எனக்குக் காட்டினார்கள. ( எரேமியா 2:27)

❋ என் ஜனங்கள் எண்ணிமுடியாத நாட்களாய் என்னை மறந்து விட்டார்கள் ( எரேமியா 2:32)

❋ ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர் ( எரேமியா 6:13)

❋ தீர்க்கதரிசிகள் முதல் ஆசாரியர்மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர் ( எரேமியா 6:13

❋ சமாதானம் இல்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்றுசொல்லி என்ஜனங்களின் காயங்களை மேற்பூச்சாய் குணமாக்குதல் ( எரேமியா 6:14)

❋ புறஜாதிகளுடைய மார்க்கத்தை கற்றுக்கொள்ளுதல் (எரேமியா 10:2)

❋ மேய்ப்பர்கள் மிருககுணமுள்ளவர்கள் ( எரேமியா 10 : 12)

❋ தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக்கொண்டு பொய்யாய் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் (எரேமியா 14:14)

❋ தீர்க்கதரிசியும் ஆசாரியனும் மாயக்காரராயிருக்கிறார்கள் ( எரேமியா 23:11)

❋ ஒருவரும் தன் பொல்லாங்கை விட்டு திரும்பாதபடிக்குப் பொல்லாதவர்களின் கைகளை திடப்படுத்துகிறார்கள் ( எரேமியா 23:14)

❋ தீர்ககதரிசிகளின் வார்த்தையை கேளாதிருங்கள்; அவர்கள் உங்களை வீண்பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள்; கர்த்தருடைய வாக்கை அல்ல, தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் ( எரேமியா 23:16)

❋ உங்கள் தீர்கதரிசிகளும் உங்கள் குறிகாரரும் உங்களை மோசம்போக்க வொட்டாதிருங்கள்; சொப்பனம் காணப்பண்ணுகிற உங்கள் சொப்பனக்காரருக்கு செவிகொடாமலும் இருங்கள் (எரேமியா 29:8)

இந்த வசனங்களில் இருந்து நாம் தெரிந்துகொள்வது என்ன? வேதத்தை போதிப்பவர்களும் மற்றும் தங்களைத் தாங்களே தீர்க்கதரிசி என்று அழைத்துக் கொள்பவருமாகிய பலர், தங்கள் சுயலாபத்திற்காகவே, தாங்கள் யூகித்த வசனத்தைப் பேசுகிறார்கள். பல்வேறு வசனங்களைக் கோர்வையாக பேசும்பொழுது, நாம் அவைகள் தேவனுடைய வார்த்தை என தவறாக புரிந்தும் அவைகளை தீர்க்கதரிசனமாக ஏற்றுக்கொண்டும் வாழ்கிறோம். பொதுவாகவே ஊழியர்கள் மீது அன்பையும், பாசத்தையும் பொழியும் நாம், அவர்களுடைய வழிநடத்துதலை ஏற்றுக்கொள்கிறோம். முடிவு, நாம் நம்மையும் அறியாமல் தேவசித்தத்திற்குப் புறம்பான வழிகளில் நடத்தப்படுகிறோம். தயவுசெய்து, நான் சொல்லுகிறபடி செய்தால் பரலோகம் செல்லலாம் என்று கூறும் கள்ள தீர்க்கதரிகளை நம்பாமல், புறம்தள்ளி, வேதத்தை நன்றாக படிப்போம். மட்டுமின்றி வேதத்தை கவனமாக தியானிப்போம்.

மக்களின் இந்நிலையைக்கண்ட எரேமியா, தன்னுடைய புலம்பலில் ஏறெடுக்கின்ற ஜெபம் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் ஏற்றதாயிருக்கிறது. "ஐயோ நாங்கள் பாவஞ் செய்தோமே... கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும்; பூர்வகாலத்திலிருந்தது போல எங்கள் நாட்களை புதியவைகளாக்கும்" (புலம்பல் 5:16,21)

**இம்மாத உபவாச ஜெபம் 29.03.2023 அன்று நமது அலுவலகத்தில் வைத்து நடைபெறும். பலர் தனிப்பட்ட ஜெபக்குறிப்புகளை அனுப்பி ஜெபம் செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்கள். ஏற்றகாலங்களில் தேவன் நிறைவாய் உங்களை ஆசீர்வதிப்பார். தனிப்பட்ட ஜெபக்குறிப்புகளை அனுப்ப விரும்புகிறவர்கள் 8838261572 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். உங்களுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.**

## A/ C Name: Western India Mission

| | | | |
|---|---|---|---|
| **Bank:** | **Canara bank,** | **Bank:** | **Axies Bank,** |
| **Branch:** | **Vannarpettai, Tirunelveli** | **Branch:** | **KTC Nagar, Tirunelveli.** |
| **A/CNo:** | **2952101007959** | **A/C No:** | **922010016879568** |
| **IFSC Code:** | **CNRB0002952** | **IFSC Code:** | **UTIB0003601** |



நாம் புதிதாக கட்டியுள்ள ஆலயத்தில் கிறிஸ்துமஸ் நிகழ்வுகள்





ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்







பிம்ரியில் புத்தாடை பெற்ற மகிழ்ச்சியில் மாணவர்கள்

கடந்த நாட்களில் நமது மிஷனெரி பணித்தளங்களில், கிறிஸ்மஸ் விழாக்கொண்டாட்டங்கள் மிகச்சிறப்புடன் நடைபெற தேவன் அனுக்கிரகம் பண்ணினார். தேவனுக்கே மகிமை உண்டாகட்டும். மொத்தமாக 9 இடங்களில், கிறிஸ்மஸ் விழா நடைபெற்றது. நாம் எதிர்பார்த்த அளவை விட அதிகமானோர் கலந்து கொண்டனர். தேவனுடைய பிறப்பு மக்களுக்கு நடித்து காட்டப்பட்டது. அதைத்தொடர்ந்து, கிறிஸ்மஸ் விழாவின் செய்தி சொல்லப்பட்டது. மக்கள் ஆர்வமுடன் கேட்டனர். பலர் தங்கள் வாழ்வினை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தனர். பலர் தங்கள் நோய்கள் நீங்க ஜெபம் பண்ணும்படி கேட்டுக்கொண்டனர். பணித்தளத்தில் வறுமையுடன் வாழும் மக்களுக்கு, குளிரைத்தாங்க ஏற்ற கம்பளி ஆடைகள், ஏழைமக்களுக்கான புதிய ஆடைகள், சிறுவர்களுக்கேற்ற புதிய ஆடைகள் வழங்கப்பட்டது. இதற்காக ஜெபித்த மற்றும் பொருளாதார உதவிகள் செய்த தேவபிள்ளைகள், மற்றும் புதியஆடைகள் வழங்கிய அனைவருக்கும் நன்றி சொல்கிறோம். தேவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக !



பூர்கியில் புத்தாடை பெற்ற மகிழ்ச்சியில் மாணவர்கள்

## சாட்சிகள்

காக்ஷாலா கிராமத்தை சார்ந்த கார்திலால் குடும்பம் தன் மகனின் தற்கொலை செயலால் கிராமத்தினரால் மிகவும் மோசமான நிலையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். மகனின் சரீரத்தை தனது சொந்த கைகளால் எடுத்து அடக்கம் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். அக்குடும்பத்தின் துன்பநேரத்தில், நமது விசுவாசிகள் மற்றும் ஊழியர்கள் செய்த உதவிகள் மற்றும் ஆண்டவருடைய வாக்கினால் இவர்களை தேற்றியது போன்ற சம்பவங்களைப் பார்த்து, தேவனை அறிய ஆரம்பித்தார்கள். தற்போது ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய திருச்சபையில் அங்கமாகியுள்ளனர்.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

குயிதா கிராமத்தில், மகராஜ் என்ற குடும்பத்திலிருந்து, கர்ஷிலா என்ற பெண் நமது ஆராதனையில் கலந்து கொள்கிறாள். தலைமுறை தலைமுறையாக மந்திரவாதம் செய்வது மாத்திரமே அவர்களது ஒரே தொழில். இந்த பெண் மாத்திரம் அல்ல முழுகுடும்பமே இரட்சிக்கப்படும்படி தேவனிடத்தில் ஜெபிப்போம்.

கர்த்தருடைய பெரிதான கிருபையால், இந்த ஆண்டு துவக்கத்தில், தாப்பி நதிக்கு அக்கரையில் இருக்கின்ற நர்மதா மாவட்டத்தில் உள்ள, நேவடியாம்பா பகுதியுள்ள மக்களுக்கு, முதல்முறையாக சுவிசேஷம் 4 இடங்களில், அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் ஆர்வத்துடன் கேட்டனர். இம்மக்கள் இரட்சிக்கப்படவும், மக்களின் வாழ்வாதாரங்கள் மேம்படவும், இங்கு திருச்சபைகள் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

## 2022 கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள்









## ஜெபவிண்ணப்பங்கள்

- பூர்கியில் உள்ள ஜனனி (30) என்ற பெண்ணின் பெற்றோர்கள் மந்திரவதம் செய்யும் தொழிலைசெய்பவர்கள். இப்பெண்ணும் இவளது கணவனும் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று நமது சபையோடு இணைந்துள்ளனர். இதிநிமித்தம் அவரது உறவினர்கள், இவரை ஒதுக்கிவைத்துள்ளனர். தற்சமயம், இவருக்கு மயக்கம், தலைசுற்றல் ஏற்பட்டு, சரியாக உணவருந்த முடியாமலும், மற்ற பணிகளை செய்யமுடியாமலும் மிகுந்த சிரமத்திலுள்ளார். உதவிசெய்ய யாருமில்லாத நிலையில் நமது ஊழியர்கள் இவரை அங்குள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். மருத்துவர் பரிசோதித்து விட்டு, இவருக்கு நரம்பு பகுதியில் ஏற்பட்ட நோய். இதனை இங்கு வைத்து சுகப்படுத்த இயலாது, அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுங்கள் என்று கூறிவிட்டார். எனவே இவளை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு MRI மற்றும் CT scan ஆகியவைகள் எடுத்து பார்த்தனர். அதிலும் ஒன்றுமில்லை. எனவே மருத்துவமனையிலிருந்து அழைத்து, பூர்கி ஜெப ஆலயத்தில் வைத்து ஜெபம் பண்ணிவருகின்றனர். சீக்கிரத்தில் இவள் பூரணசுகம் பெறவும், மந்திரவாதி குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

- பாந்தர்கவுடா பகுதியைச் சார்ந்த சகோதரி ப்ரஞ்சனா, தற்போது 5 மாதகர்பிணியாக உள்ளார். கடந்த மாதம் மருத்துவமனையில் சோதித்து பார்த்த போது, சிசுவின் உடலில் பல்வேறு பிரச்சனைகள் உள்ளதாகவும் அதனால் சிசு உருவாகும் பொழுது பல்வேறு பிரச்சனைகள் வரும் என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். மிகுந்த மனக்கவலை அடைந்துள்ளார்கள். இவர்களது மனக்கவலைகள் தீரவும் சுகப்பிரசவம் ஏற்படவும் ஜெபியுங்கள்.

- பாந்தர்கவுடா பகுதியைச ்சார்ந்த வைஷ்ணவி (15) வலிப்பு நோயால் மிகுந்த சிரமத்திலுள்ளார். இவளுக்கு வலிப்பு நோய் குணமாகவும் குடும்பத்தினர் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாகவும் ஜெபிப்போம்.

- கிராமப்புற மக்கள் மருத்துவமனையில் சிகிச்சைபெற வரும்பொழுது, அவர்களுக்கென்று மாநில அரசால் ஏற்படுத்தபட்ட "ஆயூசியமான் திட்ட அட்டையை" மருத்துவமனை ஊழியர்கள் பிடுங்கிவைத்துக ்கொண்டு, தேவையில்லாத சிகிட்சையை செய்து, ஆயூசியமான் திட்ட அட்டையிலிருந்து பணத்தை பறித்துக் கொள்கிறார்கள். படிப்பறிவு இல்லாத நமது விசுவாச சகோதரி மருத்துவமனைக்குச் செல்லும் பொழுது, சாதாரண வியாதிக்குச் சென்ற அவரை டயாலிஸிஸ் என ஊழியர்கள் ஏமாற்றி பணத்தை பறித்துக்கொண்டனர். இத்தனைய நிலை நீங்கும்படி ஜெபிப்போம்.

அன்பரின் பணியில்,
**Dr.G. ஜெயக்குமார் மற்றும் ஊழியர்கள்**


உங்கள் ஜெப தேவைகளுக்கும் மேற்கு இந்திய பகுதிகளில் நடைபெறும் மிஷனெரி ஊழிய விபரங்களை அறிந்து கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எங்கள் மொபைல் எண்கள் மற்றும் முகவரி:

| | | | |
|---|---|---|---|
| Dr. ஜெயக்குமார் | 9894075795 | சகோ. தங்கராஜ் | 9944306154 |
| சகோ. செல்வக்குமார் | 9994040186 | சகோ. ஃபெலிக்ஸ் | 9600992654 |
| சகோ. கோயில்பிள்ளை | 9159827209 | | |

**Our Address :**

**Western India Mission,** C-98, East Rahmath Nagar, Tirunelveli – 627 011.

**வெஸ்டன் இந்தியா மிஷன் சி-98, கிழக்கு ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011.**

இணையதள முகவரி : https://westernindiamission.com



*DIOCESAN OFFSET PRESS, PALAI - PH : 93849 23182*